

# ALPHA MIND POWER™

" Unwind Your Mind & Empower Yourself "

# Newsletter

## October 2011

*My dear Alpha Siddha,*

*I am writing this with a lot of love and blessings.*

*I am writing about the recent experience of a senior Alpha Siddha who has attended all our workshops and has been practicing very regularly. I am sharing this with you because it will bring a lot of clarity and peace in the minds of many Alpha Siddhas.*

*This Alpha Siddha has been practicing Alpha meditation for the past few years. She has even attended our newly launched class Sri Vidya, a very high level of meditation, and has been practicing every day. She was seeing a lot of benefits in life with this meditation. Above all, she personally shared with me about the absolute bliss that she was experiencing everyday. A few days back she met me and with great hesitation expressed the confusion and doubt that had crept into her mind and wanted to know how to come out of it.*

*Her meditation practice which was going on very beautifully and giving her excellent happiness and peace had stopped suddenly due to an interference. She had explained about her meditation practice to a family friend. That person had ridiculed it saying her own practice of meditation was superior. She had emphasized that it is best to practice meditation with severe rituals for the body and mind, where you give up many pleasures of life and renounce everything. She had reiterated that only that kind of practice can give spiritual growth. She felt Alpha meditation looked too simple and hence could not give any benefit. Our Alpha Siddha got totally confused and was unable to meditate for nearly a month. Finally, she had come to see me with a lot of confusion and guilt in her mind.*

*I explained to her. For a person who has renounced all pleasures of life and has moved away from normal life, it is possible to indulge in severe practices for the body and mind. Those practices are neither suitable for the common man, nor necessary. What the common man needs today is a meditation that can be done in half an hour's time, a meditation which can easily take him to a very high level of energy, a meditation that can cleanse him and give peace and bliss and make him an empowered person.*

*Before you listen to what others say and get confused, understand our meditation well. Your own experience is enough for this. What kind of bliss do you experience during Alpha meditation, what kind of difference has Alpha made in your life? Think about all this and register it in your mind. Nobody else has to explain this to you.*

*The greatest enemy for spiritual growth is doubt. When meditation is practiced with the conviction that we are on the right path, the meditation itself becomes better and the benefit even better.*

*Our Alpha Siddha's mind became clear once again and today she is enjoying the bliss and peace of Alpha meditation.*

*We are now in the last quarter of this year. We are moving very fast towards 2012. At this point, it is my request that every Alpha Siddha understands the power of our meditation, practices it daily and brings in a lot of positive energy to this Earth.*

*Our Alpha meditation is very simple and yet very very powerful. To experience this power completely, to understand the secret of this power totally, to become a very powerful person, practice Alpha meditation every day without an iota of doubt in your mind.*

*Lets create a new world!*
*With Alpha a new world!*

*With Love and blessings,*

***Dr. Viji Panthaiyan***

**Important Announcement!**

**Watch Guruji's Program on "JAYAPLUS TV"**
**every Friday at 7.30am. Don't Miss !!!!**




**Guruji at Srividya workshop - Chennai**



**Guruji with Alpha Siddhas at Rishikesh**

என் அன்பிற்குறிய ஆல்ஃபா சித்தரே,

மிகுந்த அன்புடன் ஆசீர்வாதத்துடன் இக்கடிதத்தை எழுதுகிறேன்.
ஆல்ஃபா தியானத்தை மிகுந்த ஈடுபாட்டுடன் பயின்று நமது வகுப்புகள் அனைத்திலும் பங்கு பெற்றுள்ள ஒரு ஆல்ஃபா சித்தரின் சமீபத்திய அனுபவத்தைப் பற்றி இங்கு எழுதுகிறேன். இவரது அனுபவம் பல ஆல்ஃபா சித்தர்களின் மனதில் தெளிவும் நிம்மதியும் பிறக்க செய்யும் என்பதால் இதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்த ஆல்ஃபா சித்தர் கடந்த சில ஆண்டுகளாக நமது வகுப்புகளில் கலந்து கொண்டு தொடர்ந்து பயிற்சி செய்து வந்தார். சமீபத்தில் நான் அறிமுகப்படுத்திய ஸ்ரீவித்யா என்ற மிக உயர்ந்த நிலை தியானத்தையும் பயின்று தினமும் தவறாமல் பயிற்சி செய்து வந்தார். அதன் மூலம் பல நன்மைகளையும் வாழ்க்கையில் கண்டார். எல்லாவற்றிற்கும் மேலாக தினம் தினம் தான் அந்த தியானத்தில் உணரும் பேரானந்தத்தையும், மகிழ்ச்சியையும் பல முறை எனக்குத் தெரியப்படுத்தினார். இப்படி இருந்தவர் சில நாட்களுக்கு முன் என்னைச் சந்தித்தார். மிகுந்த தயக்கத்துடன் தன் மனதிலிருந்த சந்தேகத்தையும் கலக்கத்தையும் தெரியப்படுத்தி அதிலிருந்து எப்படி வெளிவருவது எனக் கேட்டார்.

மிக சிறப்பாக சென்று கொண்டிருந்த அவரது தியானப் பயிற்சி திடீரென்று ஒரு இடையூறினால் நின்றுவிட்டது. தன் குடும்ப நண்பர் ஒருவரிடம் தன் தியானப் பயிற்சியைப் பற்றி விளக்கியிருக்கிறார். உடனே அவர் அதை குறைப்படுத்தி பேசியுள்ளார். தான் பழகும் தியான முறை தான் சிறந்தது என்றும் அடித்துப் பேசியிருக்கிறார். அதில் உடலையும் மனதையும் பல விதத்தில் வருத்தி வாழ்க்கையில் பல சாதாரண சுகங்களை எல்லாம் துறந்து ஒரு விரக்தி மனப்பான்மையுடன் வாழ்வது தான் சிறந்த ஆன்மீகம் என்று கூறியிருக்கிறார். நமது ஆல்ஃபா சித்தர் பழகும் தியானம் மிகவும் சுலபமாக தெரிவதால் அதில் எந்த பிரியோஜனமும் இல்லை என்று கூறி அவர் மனதை கலக்கிவிட்டார். இவரும் சற்று குழம்பி போய்விட்டார். ஒரு மாதமாக தியானமே செய்ய முடியாமல் தவித்திருக்கிறார். கடைசியில் மனதில் உறுத்தலுடனும், குழப்பத்துடனும் என்னைக் காண வந்திருந்தார்.

அவருக்குப் புரிய வைத்தேன். எல்லாவற்றையும் துறந்து தவம் ஒன்றே போதும் என்ற நிலையில் இருக்கும் ஒருவருக்கு அப்படி தன்னையே வறுத்திக் கொள்ளும் பயிற்சிகள் சரியாக இருக்கலாம். ஆனால் அதே வழியை சாதாரண மனிதர்களால் பின்பற்றவும் முடியாது. அது தேவையும் இல்லை. இன்றைய காலத்துக்குத் தேவை அரை மணியில் செய்து முடிக்கக் கூடிய சுலபமான தியானம். குறுகிய நேரத்தில் தினமும் நமது மனதை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்று, அதிலுள்ள அழுக்குகளை களைந்து நிம்மதியையும் ஆனந்தத்தையும் தந்து ஒரு மனிதனை சிறப்படையச் செய்யும் தியானம்.

அடுத்தவர்கள் சொல்வதை கேட்டு குழம்புவதற்கு முன் நாம் பழகும் தியானம் பற்றி நன்கு புரிந்து கொள்ளுங்கள். அதற்கு உங்களது அனுபவமே போதுமானது. ஆல்ஃபா தியானம் பழகும்பொழுது எப்படிப்பட்ட ஆனந்தத்தை உணர்கிறோம், ஆல்ஃபா மூலம் வாழ்க்கையில் எவ்வளவு சிறப்பான மாற்றங்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணிப்பார்த்து அதை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். இதை வேறு யாரும் உங்களுக்கு எடுத்து சொல்ல வேண்டியதில்லை.

ஆன்மீக வளர்ச்சிக்கு மிகப்பெரிய எதிரி குழப்பம் தான். நாம் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்ற தெளிவுடன் செயல்பட்டால் தியானமும் சிறக்கும், அதன் பயனும் அதிகரிக்கும். அந்த ஆல்ஃபா சித்தர் மனம் தெளிந்து இன்று மீண்டும் ஆல்ஃபா தியானம் தரும் மகிழ்ச்சியிலும் ஆனந்தத்திலும் திளைத்துக் கொண்டிருக்கிறார்.
இந்த வருடத்தின் கடைசி காலாண்டில் இருக்கிறோம். 2012ம் ஆண்டை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறோம். இந்நேரத்தில் ஒவ்வொரு ஆல்ஃபா சித்தரும் நமது தியானத்தின் சக்தியை உணர்ந்து தினமும் பயின்று சிறந்த சக்தியை இந்த பூமியில் அதிகரிக்க செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். நமது ஆல்ஃபா தியானம் சுலபமானது. ஆனால் மிக மிக சக்தி வாய்ந்தது. அந்த சக்தியை முழுமையாக அடைய, அதன் சூட்சுமத்தை முழுமையாக புரிந்து கொள்ள, மன வலிமை மிக்க ஒரு மனிதராக வாழ, மனதில் எந்த குழப்பத்திற்கும் இடம் கொடுக்காமல் தொடர்ந்து பயிற்சி செய்து வாருங்கள்.

புதியதோர் உலகம் செய்வோம்!
ஆல்ஃபாவின் மூலம் இதை செய்வோம்!

அன்புடன் ஆசியுடன்
**டாக்டர் விஜி பந்தையன்**

## முக்கிய அறிவிப்பு!

**குருஜீயின் நிகழ்ச்சி ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு "ஜெயா ப்ளஸ் டிவி"யில் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்!**


**Level - 2 workshop in Chennai**


**Guruji with Alpha Siddhas - Trichy workshop**

## ஸ்ரீ வித்யா தியான அனுபவம்

ஸ்ரீ வித்யா தியான வகுப்பில் பாலாவைப் பற்றி நான் எழுதிய பாடலில் கடைசி இரண்டு வரிகள்

“உன் திருவடியில் நானிருந்தால்
எத்தனை ஜென்மம்தான்
எடுத்து நான் வந்தாலும்

போதாது ஸ்ரீ பாலா” என்று எழுதியிருந்தேன். ஆனால் ஸ்ரீ வித்யா தியானம், வகுப்பில் செய்யும்பொழுது ‘உனக்கு ஜென்மமே வேணாம்னு இருக்கேன். நீ ஏன் ஜென்மம் கேட்கிறாய்?, இனிவேறு ஜென்மம் தான் கிடையாது’ என்று எழுது என்ற பாலாவின் கட்டளைப்படி மாற்றி எழுதியிருக்கிறேன். இதை நினைத்தாலே எனக்கு மெய் சிலிர்க்கிறது. இத்தகையை தெய்வீக அனுபவத்தை கொடுத்த தங்களை குருவாக அடைய நான் மிகவும் பாக்கியம் செய்திருக்கிறேன். இதோ அந்த பாடல்:

பாலா சரணம்! சரணம் பாலா!

நெமிலி ஸ்ரீ பாலா!
சின்னஞ் சிறுமியாய்
நெமிலியில் வந்தமர்ந்து
உலகத்தை காக்கும் தாயே!
என் உள்ளத்தில் வந்தமர்ந்து
இல்லத்தில் ஒளியேற்றி
இருளினை விரட்டிடு தாயே!

தங்க கொலுசெடுத்து
உன் தந்தக் கால் பூட்டி
கண்ணுக்கு மையும் இட்டு
தலை வாரி பூச்சூடி
பிறை நெற்றி பொட்டிட்டு
அள்ளி அணைப்பேன் மகளே!

வெள்ளிக் கிண்ணத்தில்
வெள்ளை அன்னமிட்டு
பசும்பாலும் தெளிதேனுடன்
சர்க்கரையும் கூட்டி
சத்தாக பிசைந்து என்
கையால் ஊட்டி மகிழ்வேனே!

தாய்க்குத் தாயாய்!
சேய்க்குச் சேயாய்!
என்னுடன் இருப்பாய் பாலா!
உன் திருவடியில் நானிருந்தால்
இனிவேறு ஜென்மம்தான்
கிடையாது...ஸ்ரீ பாலா!

**திருமதி சந்திரா வையாதுரை – சென்னை**

*VISIT OUR WEBSITE FOR*

- Guruji's Intro Talk in English & Tamil
- Guruji's latest T.V programs (Pothigai, Jaya Plus, Kalaignar, Sadhana TV)
- AMP Workshop Photos and Videos
- AMP Newsletters

### Alpha Music Therapy

**"Alpha Music Therapy"** is a music treatment developed by our Guruji to help us to redirect our thoughts in a way which is best for us. This is a treatment customized for each person and given for one hour by Guruji. Please contact AMP office for personal counseling and Alpha Music Therapy with Guruji.

### *Important Announcement*

- Alpha Siddhas are requested to attend the monthly meeting in your cities. By interacting with other Alpha Siddhas you can have your doubts cleared.
- You will receive the details of the Monthly Meeting by SMS. For more details please contact your city co-ordinator or AMP Office.

எனது கணவர் இறந்தவுடன் நான் மனதளவில் மிகவும் பாதிப்படைந்திருந்தேன். ஆல்ஃபா மைண்ட் பவர் தியானத்தின் மூலம் தான் அந்த பாதிப்பிலிருந்து மீண்டேன். நான் ஒரு குழந்தை தத்து எடுத்து வளர்க்க விரும்பி ஒரு காப்பகத்தை அனுகினேன். அவர்கள் 5 வருடம் கழித்துதான் கொடுக்க முடியும் என்று கூறிவிட்டார்கள். ஆல்ஃபா மைண்ட் பவர் தியானத்தின் மூலம் குழந்தை எனக்கு சீக்கிரம் கிடைத்துவிட்டதுபோலவும், அது என் மடியில் தவழ்வது போலவும் காட்சியாக பார்த்துவந்தேன். ஒரே மாதத்தில் எனக்கு அந்த காப்பகத்திலிருந்து குழந்தை தத்து எடுத்துக் கொள்ளலாம் என்ற தகவல் கிடைத்தது. இப்பொழுது என் கையில் ஒரு அழகிய ஆண் குழந்தை உள்ளது. இந்த எல்லையற்ற ஆனந்தம் கிடைக்கப் பெற்றது ஆல்ஃபா மைண்ட் பவர் சக்தியினால் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆல்ஃபாவிற்கு நன்றி!

**திருமதி லக்ஷ்மி – சென்னை**

என்னுடைய கணவரும், மகளும் எப்பொழுதும் பணம் வேண்டும், பொருள் வேண்டும், நகை வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள். நான் அவர்களை ’எதற்கு இந்த பேராசை?’ என்று திட்டிக் கொண்டே இருப்பேன். அது தவறு என்பதை நான் ஆல்ஃபா மைண்ட் பவர் 3ம் கட்ட வகுப்பில் **’சௌபாக்கியம் தரும் தியானம்’** செய்யும் பொழுது தான் உணர்ந்தேன். இந்த தியானத்தின் பிறகு தான் நமக்கு கிடைக்க இருக்கும் செல்வளங்களை நானே தடுத்துக் கொண்டிருந்தேன் என்று நன்கு புரிந்துகொண்டேன். இந்த தியானத்தை செய்ய செய்ய என் வீட்டில் செல்வ வளங்கள் நிறைவதை இப்பொழுது நான் கண் கூடாக காண்கிறேன். இதற்கு முழு காரணம் ஆல்ஃபா மைண்ட் பவர் தியானம் தான்.

**ஆல்ஃபா சித்தர் – சென்னை**

I completed my ICWA sucessfully by clearing both groups in the Final stage in a single attempt with the help of ALPHA. Myself and My wife(Alpha Siddha – Level-5) visualised the success of ICWA and passed colors and energy balls on a daily basis as taught by our Guruji. We are happy now and surrender our gratitude to the feet of Guruji for the path shown to us.

**Mr & Mrs.S.Balamurugasundaram**

My friend’s marksheet was issued with her grade misprinted. She was very upset as it is very difficult to get it corrected. I did Alpha Meditation for her and visualised her marksheet with the correct grade. To everyone’s surprise, she got a fresh certificate with the correct grade within 3 days. We were very happy. Alpha works like Magic! Thanks ALPHA!

**Ms. R. Saranya – Chennai**

My husband has always been very angry and irritated for the past 25 years. After Alpha he is very calm and pleasant now. I am also very peaceful and happy. Most importantly, I am able to sleep peacefully. This is a great change in our lives. I will be eternally grateful to ALPHA for this!!

**Ms. Vijayalakshmi Theagarajan – Chennai**

In 2007, I had taken music lessons and I couldn’t continue. This year I was searching for the same teacher. Until early August I couldn’t find her. I did Alpha Meditation to find her. What a surprise! I found her and she remembered me. I am returning to my classes. Thanks to ALPHA!

**Ms. Nancy Needhima - Chennai**

In 2006, I lost my husband. After that I attended Alpha Level – 1. Alpha helped me to come out of my depression and move on in life with a positive attitude. Later, I decided to adopt a baby. When I approached an orphanage, I was told that it will take 5 years for me to adopt a baby. I was heartbroken as I wanted a baby immediately. I did Alpha and visualised a baby crawling and playing in my house. To my great surprise and joy, within one month I got a healthy, cute baby boy from the orphanage. Thanks to Alpha, Thanks to Guruji!

**Ms. R. Lakshmi - Chennai**